Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ மாசி மீ கஅ உ வெள்ளிக்கிழமை (1 MAR 1957) [இல-சசு]

### கலாசாரக் கண்காட்சி

யாழ்ப்பாண நடனக் கல்லூரியின் நிதி யுதவிக்காகக் கலாசாரக் கண்காட்சி ஒன்று நடத்தப்படுகின்றது. இந்திய படவமைப்பு அதிபர் ஸ்ரீ எஸ். முகர்ஜி இக்காட்சியைத் திறந்துவைத்துக் கல்லூரியதிபர் ஸ்ரீ வி. ஆர். இராசநாயகமவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினார்.

### இந்தியதொழிலாளரை நீக்க மந்திரியின் திடசங்கற்பம்

சமூகத்துறை அமைச்சர் ஸ்ரீ ரி. பி. இலங்கரத்தின கம்பளையிற் பேசும்போது, மலைநாட்டுக் கிராமங்களில் வசிப்பவர்கள் தங்கள் உடைமைகள் பறிக்கப்பட்டுள்ளார்கள். அதனால் அவர்கள் மிகவும் வறிய சீவியம் சீவிக்கிறார்கள். தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலாளரை நீக்கி அவர்களுடைய இடத்தில் (சிங்கள) இக்கிராம வாசிகளை அமர்த்தப் பாராளுமன்றம் மூலம் நான் வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய முயலுவேன். நான் இம் முயற்சியில் சித்தியடையாது விட்டால் எனது மந்திரிப்பதவியை நான் துறந்து விடுவேன் என்று கூறினார்.

## இந்து அரசர் வருகை

### வரவேற்பொழுங்குகள் உடனே செய்யவேண்டும்

மகிமை தங்கிய நேபாள அரசர் பங்குனி (மார்ச்) முற்பகுதியில் புத்த ஜயந்தித் தொடர்பில் இலங்கைக்கு வருகின்றார். நேபாளம் ஒன்றே இன்று உலகிலுள்ள இந்து சுயராச்சியம் என்பது யாவருமறிந்த உண்மையாகும். இங்கே வரவிருக்கும் நேபாள அரசர் ஒருவரே இக்காலத்தில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு இந்து அரசராவார். பண்டு தொட்டே பல காலமாற்றங்களுக்கூடாக, இந்து சமயமும், இந்துப் பண்பாடும் செழித்து வளரும் நிலைக்களனா யிலங்குகின்றது நேபாளம்.

ஆகையினாலே இத்தகைய பெருமை வாய்ந்த தனி இந்து அரசரை **எங்கள் சைவ நிலையங்களிலும், சைவக் கோயில்களிலும் வரவேற்க** ஒழுங்குசெய்தல் எம் சமயத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் ஓர் சிறந்த சாதனமாகும்

அரசர் இலங்கைக்கு வரும்வரையும் பார்த்துக்கொண்டிராது வரவேற்பொழுங்குகள் உடனே செய்யப்படுதல் வேண்டும். நீண்ட ஆலோசனைகள் நடத்தக் காலம் போதாது. சிறிதும் கால தாமசமின்றி உடனே செயலாற்றுதல் வேண்டும். இது எங்கள் மீது பொறுத்த தலையாய கடனாகும்.

கொழும்பு, 21-2-57. சு. சிவசுப்பிரமணியம்.

அரசியல் அலை

## நிமிடம் ஐந்தாவது நித்திரை பங்கப்படவில்லையாம்!

—:0:—

### குழப்பத்தைக்கண்டுமசையாத கும்பகருணன்

### பிரதமரின் பிடிவாதப் பேச்சு!

போட்டாபோட்டிப் பேச்சில் நிபுணனாக விளங்குவதுதான் அரசியற்றலைமைக்கு அணியாகும் என்று எண்ணி முதல் அமைச்சர் பண்டாரநாயக மூச்சுவிடாமல் வாயால் வீரம் சொல்லிக்கொண்டு வருகிறார்.

பிரதமர் நித்திரைப் பிரியனோ இல்லையோ என்ற பேச்சு எழவேயில்லை. எந்தக் காலத்திலும் இலங்கையிலில்லாத கலகமும் குழப்பமும் அதிருப்தியும் திரு. பண்டாரநாயகவின் ஆட்சியிலேயே தங்கியிருக்கின்ற நிலைமையை அவர் ஒப்புக்கொள்ளாது விடவுமில்லை. ஆனால் கும்பகருணன் போல உலகம் எவ்வாறானாலென்ன நித்திரையே உத்தமம் என்று நல்லாய்ச் சயனவுல்லாசத்திலேகாலத்தைக் கழிக்கின்றாராம்! இத்தகைய பிரதமருக்கு ஏன் அரசியல் ஆசையிருக்கின்றது என்று திரு. பொதுசனம் கேட்கின்றார்.

பிரதமராய் இருப்பவர் சட்டங்களைக் கொண்டுநடத்தும் ஆற்றல் உள்ளவராக வேண்டும். இப்பொழுது பல வாரங்களாகச் சிங்களச் சிறீ எதிர்ப்பு இயக்தார் மோட்டார் வாகனச் சட்டத்தில் ஒரு விதியை எதிர்த்து வருகிறார்கள். இருந்தும் திரு. பண்டாரநாயக நல்ல முறையில் நாழிகைக் கணக்காக நித்திரை செய்கின்றாராம்!

நித்திரையிலும் பலவகையுண்டு. கண்கள் மூடிய வண்ணம் மனம் விழிப்பாயிருந்து உடம்பு அங்கும் இங்கும் அசைந்து வருத்தப்படுவது ஒருவகை நித்திரை. இந்தவித அநுபவமுடையவர்களுக்குக் கோபம் வருவது மிக எளிது. நாகஞ் சீறினதுபோலச் சினந்துபேசுவார்கள். திரு. பண்டாரநாயகவும் இப்பொழுது அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுவதைப் பார்த்தால் நித்திரைக் குழப்பத்தால் நிகழ்ந்த இரத்தக் கொதிப்பின் விளைவுபோல இருக்கின்றது. காண்பதெல்லாம் பைசாசம் என்று கவலைப்படுகின்றவர்கள் வீரர்கள் அல்லர். தோல்விக்குக் காலம் அண்மித்துவிட்டால் ஆகாயமே ஆபத்தான போர்க்களமாய்ப் பயங்கரத்தை விளைவிக்கும் என்று பொதுவாகச் சொல்வார்கள். முசோலனி, கிட்லர் முதலியவர் கடைசி காலத்திற் கண்டதெல்லாம் பயங்கரக் கனவுதானே, அதுபோல மனத்திலே பய மிகுந்தமையால் எச்சரிக்கை செய்வதை ஒரு மாற்று மருந்தாகப் பயன்படுத்துகின்றார் பிரதமர்.

## மொழிப் பிணக்குத் தீர்க்க முறையானவழிவேண்டும்

### கூட்டாலோசனையின் குறிக்கோள் என்ன?

இன்று இலங்கையில் நடப்பதைத் தமிழ் மக்கள் சற்றும் அறியாதவர்களாய் இருக்கிறார்கள். தற்போதுள்ள நிலைமையில் திடீரெனக் குழப்பம் நிலவக்கூடும். தமிழ் மக்கள் நடப்பவற்றை அவதானித்து விழிப்புடன் இருக்க வேண்டும். நான் பல அரசியற் கட்சித் தலைவர்களுடனும் கலந்து பேசியதனாலேயே இதனைக் கூறுகின்றேன். இலங்கையில் கடந்த பத்து வருடங்களாக நடப்பவற்றை ஆராய்ந்து பார்த்தால் உண்மை நிலைமை விளங்கும்."

சடுதியாக அதிகாரம் ஒரு சாதிக்கு இந்நாட்டில் வரவில்லை. ஒரு செல்வர் கூட்டத்தினர்க்கே சடுதியாக அதிகாரம் வந்தது. அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியென்று தங்களைச் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் அவர்களிடம் ஐக்கியமோ தேசியமோ கட்சியோ இருக்கவில்லை. அவர்கள் ஒன்றில் மாத்திரம் ஐக்கியமாக இருந்தார்கள். அதுதான் அதிகார வேட்கை.

இப்படிப்பட்டவர்களிடம் சிக்கிக்கிடந்த அதிகாரம் மக்கள் முன்னணிக் கட்சியினருக்கு வந்தது. அவர்கள் மக்களிடமுள்ள மிருகத்தனத்தைச் சாதிவெறி, பாஷை வெறிகளின் மூலம் தூண்டித்தான் அதிகாரத்திற்கு வந்தார்கள். இவர்கள் மக்களிடமுள்ள நற்குணங்களைத் தூண்டி அதிகாரத்துக்கு வரவில்லை.

இப்பொழுது சாதிவெறி நாட்டின் எப்பகுதியிலும் பரவியிருக்கின்றது. தமிழருக்குச் சென்ற காலம் இனிமேல் திரும்பி வரமாட்டாது. தமிழனுக்கு அரசியலில் ஒரேயொரு வழியாகவிருந்த உத்தியோகத்தை இனிமேல் சற்றேனும் எதிர் பார்க்கக்கூடாது. தமிழன் தன் நிலையைப் புதிய முறையில் மதிப்பிடவேண்டும்.

அதிகாரத்திலிருக்கும் அரசியல் தலைவர்களின் பாஷை மூலம்தான் நாடு ஆளப்படவேண்டுமென்று கூறப்படுகின்றது. பாஷை சம்பந்தமாகத் தமிழன் ஒரு அடிப்படைக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். கூட்டாலோசனைமூலம் இதனைத் தீர்ப்பதென்றால் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு அடிப்படையான கொள்கைவேண்டும். இன்றேல்கூட்டாலோசனை பயன்படாது. கூட்டாலோசனையானது உரிய தகுதி வாய்ந்தவர்களுடனன்றி வேறு பேர்களுடன் செய்யும் கூட்டாலோசனை பயனளிக்காது.

எங்களுடைய பாஷை மூலமே ஆளப்படுதற்கு உரிமை வாய்ந்த சுதந்திர மக்களாய் நாம் இருக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும். மக்களை அவர்கள் பாஷை மூலம் தான் ஆளலாம் என்பதை ஆங்கிலேயர்கூட உணர்ந்திருந்தார்கள். இதிலிருந்து நாம் சற்றேனும் விலகமுடியாது. இப்போது தமிழர்கள் என்ற சாதி இலங்கையில் இருப்பதே திண்டாட்டமாயுள்ளது.

இதற்காகத் தமிழர்களாகிய நாம் கவலையுறத் தேவையில்லை. ஏனென்றால் நாம் மூளைத் திறமையும் எத்தொழிலிலும் வெற்றி பெறக்கூடிய ஆற்றலும் திறமையும் உடையவர்கள். எங்கள் திறமைகளையும் ஆற்றல்களையும் எவராலும் அழித்துவிட முடியாது. நாங்கள் இந் நாட்டில் நிலைத்து வாழ்வதற்கு இடையறாத விழிப்புடன் இருக்கவேண்டும் என்று உடுப்பிட்டியில் நடந்த ஆங்கிலக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் உயர் நீதிமன்ற நீதிபதியாயிருந்து இளைப்பாறுகின்ற ஸ்ரீ ஆர். ஆர். குரூசெற் தம்பையா அவர்கள் பேசும்போது கூறினார்.

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ௵ மாசி ௴ ௧௮ உ வெள்ளிக்கிழமை

## நீதிவழங்கும் நெறி

'தனிச் சிங்கள'ச் சட்டத்தை நடைமுறையிற் கொண்டுவரப் பண்டாரநாயக ஆட்சியாளர் எடுத்துவரும் முயற்சிகள் எல்லாம் சனநாயகக் கொள்கைக்கு நேர் விரோதமாயிருக்கின்றன வென்று நாம் பன்முறை எடுத்துக் காட்டியுள்ளேம். போக்குவரத்து மந்திரியாரும் ஒரே போக்குடைய கல்வி அமைச்சரும் இதுவரையிலே தனிச் சிங்களச் சட்டத்தை வழி நடத்தப் பலவிதமாக முயன்றும் பயன்படாது தடுமாறி நிற்கின்ற வேளையில் நீதிமந்திரியார் 'நானுங் கூட' என்ற வகையிற் போலும் நீதிமன்றங்களிலே தனிச் சிங்களச் சட்டத்தைப் புகுத்திவிடப் புறப்பட்டிருக்கின்றார். வழக்கறிஞர் சங்கங்களின் கருத்தை அறிவதற்கு முற்பட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கம் இந்த விபரீத முயற்சியைப்பற்றி நன்கு ஆராய்ந்து முறையான மறுமொழி ஒன்றைக் கொடுத்திருக்கின்றது. சிங்களம் நீதிமன்ற மொழியாய் வருவதற்குக் கால எல்லையைக் கணிப்பதற்கு இச் சங்கம் முற்றாய் மறுத்துவிட்டது. ஆனால் தேசமொழிகளை நீதி மன்றத்தில் ஆங்கிலத்தின் இடத்திற் பயன்படுத்துவதற்கே இன்னமும் ஆண்டுகள் ஐம்பது கழிதல் வேண்டும் என்னும் கருத்தைத் தெரிவித்திருக்கின்றது. இக் கருத்தை விரித்து விளக்குமிடத்துச் சிங்களமும் தமிழும் சம உரிமை பெற்று வருங்காலத்து நீதி மன்ற மொழிகளாய்ப் பயன்படுத்தப் பெறல் நியாயமானதென்று காட்டி அவ்வழியிலே இரு மொழிகளும அரச வரிசை பெற்று வர அரசாங்கம் என்ன ஒழுங்குகள் செய்தல் வேண்டும் என்பதையும் தெளிவாகக் கூறியிருக்கின்றது.

இச் சங்கத்தின் முடிபுகள் யாவும் தமிழ்பேசும் இனத்தின் ஏகோபித்த எண்ணத்தையே எடுத்துக் காட்டுகின்றன. தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பெற்ற காலந் தொடங்கி தமிழ் பேசும் மக்கள் ஒருமொழிக் கொள்கையை முற்றாகக் கண்டித்துத் தமிழுக்கும் சிங்களத்துக்கும் தொன்றுதொட்டு வழங்கி வந்த தன்மையிலே சம உரிமை தொடர்ந்து வழங்கப்படுதல்வேண்டும் என்று அழுத்தந் திருத்தமாக உரைத்திருக்கின்றார்கள். எனவே வழக்கறிஞர்கள் ஆராய்ந்து செய்த முடிபு தமிழகத்தின் கருத்தாகின்றது.

இது ஒருபுறம் இருக்க, நீதி மந்திரியார் எதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் என்று நாம் ஆச்சரியப்படுகின்றேம். போக்குவரத்து மந்திரியார் சிங்களச் "ஸ்ரீ" கொண்டு தாக்க எண்ணிய நோக்கம் கைகூடாமை கண்டு தத்தளிக்கின்றார், பிரதமரும் தடுமாறி விட்டார். இந்தச் சந்தர்ப்பத்திலே நீதி மந்திரிக்கு இந் நினைவு ஏன் எழுந்ததோ யாமறியேம்!

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

### 'சீமந்துச் சங்கம்' சிதைகின்றதா?

காங்கேயன் சீமந்து கூட்டுச்சங்கம் நியமனமான நிமித்தம் யோகப் பிழையானதுபோலும்! கூரைசரிந்த கூக்குரல் ஓயவில்லைச் சங்கத்தின் அங்கத்தவர்கள் இருவர் விலகிவிட்டார்கள் காங்கேயன் சீமெந்து கட்டட வேலைக்குப் பொருத்தமான முறையில் இயைந்துள்ளதென்று நிபுணர்கள் கூறியதுண்டு. ஆனல் சீமெந்துச் சங்கத்தின் இணைப்பு அத்தகையதாய் இயைந்து வருவதாய்க் காணப்படவில்லையே! ம. ஐ. முன்னணியின் அலுவல்கள் எல்லாம் இந்த வகையிலே பிளவுபடுகின்றனவே.

### கல்விமந்திரியின் காரியதரிசி போக்கு வரந்துக் கணக்கு

கல்வி மந்திரி தகநாயகவின் அந்தரங்கக்காரியதரிசி திரு. பெரேரா சொந்தமாக ஒரு மோட்டார் வண்டியை வைத்துக்கொண்டிருக்கும்பொழுது அரசாங்க உதவி நிதிபெற்று வண்டி ஒன்றை விலைக்குப் பெற்றுக் கொள்ள மனுச்செய்ததாகவும், பண உதவி கிடைத்த அன்றே முன்னிருந்த வண்டி அவரின் சகோதரனுக்கு மாற்றப்பட்ட தென்றும் அவ்வித மாற்றம் நடந்தபின்பு ஏழு நாட்களுக்கு அந்த வண்டியின் பேரால் போக்கு வரத்து உதவிப்பணம் அரசாங்கத்திடமிருந்து குறித்த காரியதரிசி பெற்றுக்கொண்டதாகவும் பாராளுமன்றத்திலே கேள்வி கேட்கப்படவிருக்கின்றது. இவ்விதமான கேள்விகளைத் திரு. தகநாயக பன்முறை பலரைப்பற்றிக் கேட்டு மகிழ்ந்திருக்கின்றார். ம. ஐ. முன்னணியின் மகத்துவத்தை விளக்குதற்குஇவ்வித கேள்விகள் கல்வி மந்திரித்துறை நிகழ்ச்சியிலிருந்து எழுகின்றனவென்பது குறிப்பிடத்தக்கது.

### மந்திரிசபைக்குள் மாற்றமா?

உணவு விவசாயப் பகுதி மந்திரியார் பிலிப்பு குணவர்த்தனவின் உற்சாகத்தைத் தடுக்க விவசாயப் பகுதியை வேறொரு மந்திரிக்குக் கொடுக்க (காணி மந்திரிக்கு) விவாதம் நடக்கின்றதாம். மாற்ற எண்ணம் திரு. பிலிப்பு குணவர்த்தனவுக்குத் தடுமாற்றத்தைக் கொடுக்கும் என்பதற் கையமில்லை.

### பாடி காவலர் தேடிப் பிடிக்கவேண்டுமா?

சிங்களச் சிறி எதிர்ப்பு இயக்கத்தாரைத் தேடிப் பிடிக்கப் பிரத்தியேக பாடிகாவல உத்தியோகத்தர் தெரிந் தெடுக்கப்பட்டிருக்கின்றார்களாம். தமிழ்எழுத்துக்களை இலக்கத் தகட்டில் ஏற்றி, பாடிகாவல நிலையத்துக்கு இந்த இயக்கத்தார் பல முறையும் சென்று வருவதையறிந்தும் அரசாங்கம் தேடிப் பிடிக்க வேண்டியதெதற்காக. திரு. இராசரத்தினவின் 'சிங்கள' இயக்கத்துக்குச் சாட்டுப் போக்குச் சொல்லவா? கையிற் புண்ணுக்குக் கண்ணாடி தேடும் ம. ஐ. முன்னணியின் விவேகமே விவேகம்.

### நியாயமான அளவு உபயோகம்!

போக்குவரத்து மந்திரியின் பாராளுமன்றக்காரியதரிசி ஒரு கூட்டத்திற் பேசும்பொழுது 1960 ம் ஆண்டிற் சர்வ சிங்களமயமாய் அரசாங்க அலுவல்கள் நடைபெறும் என்றும் அரசாங்கசமாசாரப் பத்திரிகை முழுவதும் சிங்களத்தில் வெளிவரும் என்றும்அறிவித்தாராம். வட்டமேசை மகாநாடு கூட்ட வாய்ப்பான பேச்சுத் தானே! போக்குவரத்து மந்திரிப் பகுதியாரின் நாக்கு அரசாங்கத்தின் போக்கை விளக்கும் நாக்குத்தானே!

# இந்திய பொதுத்தேர்தல்

## அரசாங்கத்தின் வளர்ந்து வரும் வெற்றி

இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் இந்திய பொதுத் தேர்தலில் இடையிடையே தோல்விகள் ஏற்பட்ட போதிலும் இந்திய தேசிய மகாநாட்டுக் கட்சியாரே (அரசாங்கக் கட்சி) பெரும்பான்மையான வெற்றிகளைப் பெற்று வருகின்றார்களாம்.

இதுவரையில் தேர்தல் நடந்த தொகுதித் தொகையும் இந்திய தேசிய மகாநாடு பெற்ற வெற்றித் தொகையும் பின்வருமாறு:—

| | மொத்தம | மகாநாட்டு வெற்றி |
|---|---|---|
| மத்தியப் பிரதேசம் | 36 | 31 |
| உத்தரப்பிரதேசம் | 22 | 13 |
| பாஞ்சாலம் | 22 | 19 |
| இராஜஸ்தானம் | 10 | 10 |
| மைசூர் | 10 | 9 |
| அசாம் | 10 | 7 |
| மொத்தம் | 106 | 89 |

# விவேகானந்த ஜயந்தி விழா

## விவேகானந்தரைப் பின்பற்றுதலால் வரும் பயன்

கொழும்புவிவேகானந்த சபை மண்டபத்தில் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமையில் சென்ற சனிக்கிழமை மாலை விவேகானந்த ஜயந்திவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் திருச்சி திருப்பாய்த்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத் தலைவர் ஸ்ரீ சித்பவானந்த சுவாமி அவர்கள் பேசும்போது சமய உட்பொருள்களை மறந்து போலி வாழ்க்கை வாழ்ந்து மக்கள் கீழ்மையடையுங் காலங்களில் சமயாசாரியர்கள் தோன்றி மக்களை நல்வழிப்படுத்துகிறார்கள். அன்னவர்களுள் ஒருவரே ஸ்ரீமத் சுவாமி விவேகானந்த அவர்கள். அவருடைய மனோநிடம் இன்று தமிழ்மக்களுக்கிருக்குமானல் அவர்கள் ஈற்றில் அடைவது இன்பமேயாகும். இக்கால இளைஞர்கள் விவேகானந்தராய் வந்த நரேந்திரரைப் பின்பற்றுகிறார்களில்லை. கடவுள் உளரா இலரா என்ற சந்தேகத்தைத் தாமாகவே குருவைத் தேடி அடைந்து அவர் நீக்கிக்கொண்டார். இவ்வுண்மையை இக்கால இளைஞர் மனத்திற் பதித்து அதற்கேற்றபடி தாமும் செய்தல் வேண்டும் என்று கூறினர்.

## அறநெறியில் நிற்பவனுக்கு இறைவன் துணை

அறத்தைக் கடைப் பிடித்து வாழ்பவன் ஒரு தனி மனிதனுக இருந்தாலும் அவனுக்கு எதிராக எத்தனைபேர் எத்தனை இயக்கங்கள் தோன்றின போதிலும் அவன் இன்னலின்றி வாழ்வான். அறநெறியில் வாழ்பவனுக்கு ஆண்டவனது அருள் கிடைக்கும். அறச்செயல் எது மற்றது எது என அறிந்து அறநெறியிற் சிறிதும் பிறழாமல் நின்றால் அறமே நமக்குத் துணையாக நிற்கும்.

வெளிக்காட்சியால் அறம் என்ன என்று அறிய முடியாது. மனத்திலுள்ள எண்ணம் என்ன என்பதை அறியவேண்டும். நமக்குத் துணையாக நிற்கும் இவ்வறத்தைச் சுயநலனுக்காகப் பயன்படுத்தக் கூடாது. பொதுநலனுக்காகவே அது பயன்படுத்தப்படுத்தப்படுதல் வேண்டும். சுயநலமானது அத்தன்மையுடையவரை அழிவுக்கே கொண்டுபோய்ச் சேர்த்துவிடும் என்று கொழும்பு விவேகானந்த சபையில் நடந்த விவேகானந்த ஜயந்தி விழாவின்போது ஸ்ரீ சுவாமி சித்பவானந்தா அவர்கள் பேசும்பொழுது கூறினர்.

### சீட்டுப் பணத்தில் நம்பிக்கைத் துரோகம்

அரசாங்க வைத்தியப்பகுதியில் நடத்தப்படும் சீட்டுப் பணத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபா இரகசியமாகக் கையாளப் பட்டுள்ளதாம். அரசாங்கக்கணக்குப் பரிசோதனைப் பகுதியினர் இதைக் கண்டுபிடித்தனர்.

—0—

### தனிச் சிங்களத்துக்குக் கொழும்பில் இடமில்லை

கொழும்பு நகரசபைக் கருமங்கள் சிங்களத்தில் மாத்திரம் நடத்தப்படுதல் வேண்டுமென்று ஸ்ரீ. சி. கந்தர ஓர் பிரேரணையைக் கொழும்பு நகரசபைக் கூட்டத்திற் பிரேரித்தார். நகரசபைத் தலைவர் ஸ்ரீ வி ஏ சுகததாச கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

ஆங்கிலம் சிங்களம் தமிழ் ஆகிய மும் மொழிகளும் பேசும் மக்களைக் கொழும்பு நகரசபை உடையதாயிருத்தலின் ஒரு மொழியையே அச்சபையின் கரும மொழியாக்குதல் சனநாயகமாகமாட்டாது என்று குறிப்பிட்டு அப் பிரேரணையை ஸ்ரீ டி. என். டபிள்யு. சில்வா, ஸ்ரீ ரி. உருத்திரா முதலிய பலர் எதிர்த்தனர். பதினன்கு வாக்குகள் பாதகமாகவும், ஆறு வாக்குகள் சாதகமாகவும் அளிக்கப்பட்டுப் பிரேரணை தோல்வியுற்றது.

# சகோதரத்துவப் பேச்சுக்கே தடை

## உள்ளதை உள்ளவாறு சொல்லவும் கூடாதா?

அகில உலக சகோதரத்துவ இயக்கத் தொடர்பில் இலங்கை வானொலியில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஓர்பேச்சு நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தமது பேச்சின் எழுத்துப் பிரதியை அவர் இலங்கை வானொலியாருக்கு அனுப்பினார். அவர் அனுப்பிய எழுத்துப் பிரதியில் இருபந்திகளை மேலதிகாரிகளின் விருப்பத்தின்படி வெட்டி நீக்க வேண்டுமென்று வானொலியார் அவருக்கறிவித்தனராம். அவ்வாறு செய்தற்கு அவர் உடன்படவில்லை.

குறித்த பந்திகளில் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் என்ன குறிப்பிட்டிருந்தார் என்பது இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அறியவேண்டியதாகலின் அதன் பொழிப்பு இங்கே தரப்படுகின்றது.

உலக சகோதரத்துவ இயக்கத்தால் இலங்கையில் நன்மை பெறவேண்டுமானல், அது இந்நாட்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் இப்போதுள்ள விறுவிறுப்பான நிலைமையுடன் பௌத்த சமயத்துக்கும் ஏனைய சமயங்களுக்குமிடையில் ஒரு அளவுக்கு விறுவிறுப்பாயுள்ள நிலைமையும் திருத்தக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

இந்நாட்டு மக்களுக்கிடையில் நிலையான நட்புறவும் சமாதானமும் தேசாதிபதி அவர்கள் சொன்னதுபோல நிலவ வேண்டுமானல், தங்கள் மனங்களிலும் காதுகளிலும் நல்லெண்ணத்தின் அத்திபாரம் இடப்பட்டால் மாத்திரம் அது உண்டாகுமென்று இந்நாட்டிலுள்ள ஆடவர், பெண்கள், பிள்ளைகள் ஆகிய யாவரும் மனத்திற் பதித்தாலே அது அவ்வாறு உண்டாதல் கூடும்.

வேறுபாடுகளை நீக்க முயலுமிடத்தில் விட்டுக்கொடுத்தல் என்னுங் கொள்கையின் கருத்தாவது, ஒவ்வொரு சாதியினரதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தற்கு வேண்டியவையொழிந்த ஏனைய எல்லாவற்றிலும், பொது நன்மையின் பொருட்டு ஒவ்வொரு பக்கத்தாரும் எதுவோ ஒன்றை விட்டுக்கொடுக்க வேண்டுமென்பதாகும். ஆகையினலே நிலையான சமாதானத்தையும் நட்புறவையும் இந்நாட்டில் உண்டாக்கும் பொருட்டு இந்நாட்டில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தம்முடையதல்லாத மற்றச் சாதியாரிடத்தில் நம்பிக்கை உண்டாக்குதற்கு எதை எதை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று சிந்திப்பார்களாக. இக்கருத்துகள் வானொலியில இடம் பெறமுடியாத நிலைமையில் இன்று எம்நாடு இருக்கின்றது.

—0—

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

### சேரமான் சுந்தரர் சேர்ந்து தழுவினர்

சுந்தரர் மகிமையைச் சேரமான் பெருமாணயனர் சிவத்தினல் அறிந்தார். (சேரமான் பெருமாணயனர். இவர் இறைவனுடைய திருவடிகளே பொருளுந் துணையும் என்னும் மெய்யறிவு பெற்றவர். சுந்தரரிடத்துப் பத்தி நிறைந்தவர். அவரோடு திருக்கைலாயஞ் சென்றவர். பொன்வண்ணத்தந்தாதி — திருமும்மணிக்கோவை — திருவந்தாதி—திருக்கைலாசஞான வுலா என்னும் ஞான நூல்களைச் செய்தவர்.) திருவாரூருக்கு வந்தார். இருவரும் ஒருவரையொருவர் தழுவித்தழுவி நண்பு கலந்தனர். சுந்தரர், சேரமான் தோழர் எனப்பட்டார். இருவரும் பல தல யாத்திரைகள் புரிந்து, வேதாரணியத்துக்குச் சென்றனர். அங்கு அப்பராலும் சம்பந்தராலும் அடைக்கவுந் திறக்கவும் பதிகம் பாடப்பெற்ற திருவாயில் உளது. அதனை அடைந்து வணங்கினர். சுந்தரர் அங்கு "யாழைப் பழித்து" என்னும் பதிகமருளினர். பின்னர்க் குழகர்கோடிக்குச் சென்று "கடிதாய்க் கடற்காற்றுப்" பதிகம் பாடிப் — பாண்டிநாட்டில் மதுரையை அடைந்தார்.

### ஈழம் பாடிய எழில்நிறை சுந்தரன்

அங்கு பாண்டியனுடனும் சோழனுடனுங் கலந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு சிலநாளிருந்தார். அப்பால் திருப்பூவணஞ் சென்று "திருவுடையார் என்னும் பதிகமருளினர். திருப்பரங்குன்றிலே "கோத்திட்டையுங் கோவலும்" என்னும் பதிகமருளினர். வேந்தர் மூவருங் கேட்டு மகிழ்ந்தனர். வணங்கினர். பின்னர்ச் சோழனும் பாண்டியனும் விடைபெற்று மீண்டனர். சுந்தரர் சேரமானேடு இராமேச்சர தரிசனஞ் செய்தார். அங்கிருந்து ஈழநாட்டுத் திருக்கேதீச்சரத் தலத்தைப் பாடினர். (திருக்கேதீச்சரம் இலங்கையில் தேவாரம் பெற்ற இருபுண்ணிய தலங்களுள் ஒன்று. கேது பகவானல் வழிபடப்பட்டமையின் இப்பெயராயிற்றென்பர். உடற்பிணி பிறவிப் பிணிகளை மாற்றுகின்ற மருந்தாக — இத்திருத்தலத்தில் இறைவன் காட்சியளிக்கிறார். பழம் பெருமை படைத்த புனித தலம். மன்னருக்கணித்தாயுள்ள மாதோட்டத்து மாந்தை நகரில் அமைந்துள்ளது.)

அப்பால் திருச்சுழியல் சென்றார். அங்கு, "நம்முடைய வாசஸ்தலம் கானப்பேர்" எனச் சொப்பனங் கண்டு - காளைவடிவமும் கையிற் செண்டும் முடியிற் சுழியமும் (சுழியம் - குடுமி) கொண்ட தோற்றத்தை வணங்கி - வியந்து "தொண்டாடித் தொழலும்" என்னும் பதிகமருளித் திருக்கானப்பேருக்குச் சென்றார். சிலநாளில் திருவாரூருக்கு மீண்டு சேரமானேடு பரவை வீட்டில் எழுந்தருளியிருந்தார்.

### ஐயா றுடையா னருளிய வோலம்

இங்ஙனமாக ஒருநாள், சேரமான் தம்மூருக்குவரும்படி சுந்தரரை வேண்டினர். சுந்தரர் உடன்பட இருவரும் சென்றனர். வழியில் சேரமான் சுந்தரரை வணங்கி என்மனம் திருவையாற்றை நாடுகிறது என்றார். காவிரி நதி பொங்கிப் பெருகிப் பாய்ந்து கொண்டிருந்தது. சுந்தரர் "பரவும் பரிசொன்றறியேன்" என்று தொடங்கி "ஐயாறுடைய வடிகளோ" என விழித்துப் பாடினர். திருவருள் "ஓலம்" என்றது. என்னே! அதிசயம்! ஆறு பிரிந்தது. அதிசயங்கண்டு வியந்தனர். திருவையாற்றுக்குச் சென்று வணங்கி மீண்டனர். அவ்வளவுதான், மலைபோலப் பிரிந்து நின்ற நீர் மீண்டுங் கூடிப் பெருகத் தொடங்கியது. இருவருந் திருவருளை வியந்துகொண்டு கொங்குநாடு மலைநாடு தாண்டித் திருவஞ்சைக்களஞ் சேர்ந்தனர். சேரமான் அங்குச் சுந்தரரை யானைமேலேற்றிக்கொண்டு — இருவருங் கொடுங்கோளூர் என்னும் பதியைச் சென்று அடைந்தனர்.

சங்கிலியாரைச் சுந்தரர் மணந்தமை. அதற்கு இறையருள் புரிந்தமை. சத்தியந் தவறி நரயனர் இரண்டு கண்களும் மறையப்பெற்றமை — மீண்டும் பார்வை பெற்றமை—ஞானிகள் திரிகரணங்களாற் புரியுஞ் செயல்களைச் சிவன் தஞ் செயலாகக் கொள்வார் என்பது. பரவை ஊடலைத் தீர்க்கப் பரமன் தூதுசென்றமை. கலிக்காமர் கொண்ட கோபத்தைத் தணியச் செய்து அருள் புரிந்தமை—ஈழநாட்டுத் திருக்கேதீச்சர தலத்தைப் புகழ்ந்து பாடியமை—ஆறு இரண்டாகப் பிரிந்து வழிவிட்டமை முதலான விஷயங்களை இதுவரை படித்த — இன்றைய பாடங்கள் மூலமாக நன்கு அறிந்து கொண்டீர்கள். நேரமுமாகிறது. இங்கு குறிப்பிட்ட யாவற்றையும் நன்கு சிந்தித்து ஞாபகப் படுத்திக்கொள்வது உங்கள் கடமை. அடுத்த வாரம் சந்திப்போம்.

— வ. ரு

——

# திருக்கேதீச்சரமும் நாவலர்தொண்டும்

—————:O:—————

## சைவ மாணவர்கள் சிந்திக்கவேண்டியவை

————0————

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமான் 1863ம் ஆண்டுக்குப் பின் தாய்நாட்டிற் கால் வைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலேயே இருந்தார்கள். அக்காலம் அவருடைய பிரசங்கங்கள் மிகப் பல வடமராட்சியிலேயே நடைபெற்றன.

அவரது உள்ளத்திலே கிலமுற்ற தலங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. திருக்கேதீச்சரம், கீரிமலைச் சிவன்கோயில் என்பன அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றன. இவற்றுள் கீரிமலைச் சிவன்கோயில் நாவலர் இருக்கும்பொழுது அவரால் அத்திவாரக கல்லிடப்பட்டது. அதற்கு நாவலர் சில பிரமாணங்களையும் ஆக்கி அருளினர். பின்பு 1872-ம் ஆண்டு தொடக்கம் 1879ம் ஆண்டு வரையும் திருக்கேதீச்சரப் பணியில் ஈடுபட்டு உழைத்தார். அதன்பின் 1879 ம் ஆண்டு தொடக்கம் 1893ம் ஆண்டு வரையும் யாழ்ப்பாணம் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் தொண்டாற்றி முடிக்குரிய கோயில் நிலத்தை ஏலத்தில்வாங்கினர். அதில் ஒரு சிறு கோயிலைக் கட்

......................

ஸ்ரீ செ. கோவிந்தசாமிஅவர்கள்

......................

டினர். பின் 1893ம் ஆண்டு தொடக்கம் 1938ம் ஆண்டு வரையும் இத் தலத்தைப் பெருப்பிக்க வேண்டுமெனக் கருதித் திரு. த. கைலாசபிள்ளையவர்கள் தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள் அக்காலம் ஒருவரும் முன்வரவில்லை.

1938ம் ஆண்டு தொடக்கம் 1948ம் ஆண்டு வரையும் திரு. சு. சிவபாதசுந்தரனர் அவர்கள் தொண்டாற்ற முற்பட்டார்கள். அத்துடன் ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டமும் முன்வந்தது. அத் திருக்கூட்டமே இன்றைய திருப்பணிச் சபையாக மாறித் திருப்பணிகளைப் புரிந்து வருகிறது.

பரம பிதாவாகிய பரமேஸ்வரனின் திருவடிகளையடைய வேண்டுமானல் மனிதப் பிறப்பையெடுக்க வேண்டும். மனிதப் பிறப்பையெடுத்தாலே இறைவன் கழலையடைய முடியும். இதற்குள் அப்பர் சுவாமிகளும், "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என அருளிப்போந்தார். திருக்கேதீச்சரச் சுயம்புலிங்க மூர்த்தி. அது தோன்றிய காலம் தெரியாது. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னுற்றுன் அது பாடல்பெற்றது. பாடல்பெற்றபின்பே கோயிற் கட்டிடம் அழிந்தது. ஆனல் சுயம்புலிங்கப் பெருமான் இருந்தபடியே கேதீச்சரம் பிரியாது இருக்கிறார். அவ்வாறிருந்து ஆறுமுகநாவலர்பெருமான் மூலம் எமக்குத் தெரிய வைத்தார். நாவலர் இல்லாவிட்டால்திருக்கேதீச்சரமெங்கே? தேவார திருவாசகமெங்கே? நால்வர்பெருமை யெங்கே? ஆதலால் இந் நாட்டில் சமய விஷயங்களில் நாவலருக்கே முதலிடமாகும். அப்பால் உள்ள பெரியோர்களுக்கு அப்பாலாய் இடம் கொடுக்கப்படும். ஆதலால்இலங்கையிலுள்ள சைவப் பாடசாலைமாணவர்கள் எல்லோரும் நாவலரது வாழ்க்கைச் சரித்திரத்தையொட்டித் திருக்கேதீச்சர வரலாற்றை அறிதல்வேண்டும். திருக்கேதீச்சரம், கோணேசுவரம் திருப்பதிகங்களைப் படிப்பதோடு திருமுறைகளையும் படித்துணர்ந்து சைவ வழியில் நடக்கவேண்டும். இவ்வாறு நடைபெறுதற்குச் சைவ ஆசிரியர்களும் ஏனைய சைவப் பெருமக்களும் ஆவன செய்வார்களாக.

——

## பாடிகாவலருடன் நாட்டுப் படைகள்

———

நாட்டிற் குழப்பங்களுண்டாக்குவோரால் வரும் நிலைமைகளைச் சமாளித்தற்குப் பாடிகாவலருடன் நாட்டு மக்கள், உறுப்பினராகும் தொண்டர் படைகளைத் திரட்ட முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக தீர்மானித்துள்ளாராம். முதல் மந்திரி, ஸ்ரீ எம். பி. டி. சொயிசா, ஸ்ரீ எஸ். டி. பண்டாரநாயக ஆகியோர் உறுப்பினராயுள்ள உபசபை ஒன்றையும் படை திரட்டுதற்கு முதல் மந்திரி நியமித்துள்ளாராம்.

## தமிழுக்கு வாழ்வழிக்கப் பெண்கள் முன்வரவேண்டும்

—திருமதி மகேசுவரி பாலகிருஷ்ணன்.

———o———

## எழுத்தாளர்களே உலகில் ஆற்றல் மிக்கவர்கள்

—பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

"முற்காலத்திலும் தமிழ் நாட்டையும் தமிழ் இனத்தையும் காத்தற்குத் தமிழ்ப் பெண்கள் பெருந் தியாகஞ் செய்த வரலாறுகளைச் சங்க நூல்கள் கூறுகின்றன. தமிழுக்குப் பேராபத் தேற்பட்ட இக்காலத்திலும் நம்பெண்மணிகள் தம் தாய்மொழியை வாழவைக்கத் தியாகஞ் செய்தல் வேண்டும்" என்று திருமதி மகேசவரி பாலகிருஷ்ணன் அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "இலக்கியப் பெண்மணிகள்" என்பதுபற்றிப் பேசும் பொழுது கூறினர்.

"தமிழை வளப்படுத்து தற்தத் தமிழ்ப் பெண்கள் செய்த தொண்டுகளையும் ஔவையார் அதிகமானின் தூதராகத் தொண்டைமானிடஞ் சென்று அவர்களுக்கிடையில் மூளவிருந்த போரை நிறுத்தியவர்களை நண்பர்களாக்கிய பெருஞ் செயலையும் கண்ணகியின் கற்பின் பொற்பையும்மேலும் எடுத்துரைத்தார்."

அவருக்குப் பின் ஆசிய எழுத்தாளர் மாநாடு என்பது பற்றிப் பேசிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் "இந்த உலகத்திலே எழுத்தாளர்களே ஆற்றல் மிகுந்தவர்கள். அணுக்குண்டு சலவாயுக்குண்டு முதலியன அழிவை மாத்திரமே உண்டாக்கும். அரசியல் வாதிகளும் என்றும்நிலைத்த ஆற்றலுடையவர்களல்லர். ஆக்கப் பாதையில் மக்களை வழிநடத்தத்தக்க பேராற்றல் வாய்ந்தவர்கள் எழுத்தாளர்களே என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் பெருமான் கூறியுள்ளார். இதுமாத்திரமா! அரசர்களையும் அரசியற் றலைவர்களையும் அடக்கி யொடுக்கும் ஆற்றல் எழுத்தாளர்களுக்கு உண்டு என்பதையும் அவர் கூறியுளர்."

"வெற்றி வேந்தர் பலர் மாண்டு மறைந்துபோய் விட்டனர். சரித்திர நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் மாத்திரமே அவர்கள் பெயர் காணப்படுகின்றன. ஆனால், அவர்கள் காலத்தில் வாழ்ந்த வள்ளுவர், கம்பர் இளங்கோ போன்ற பெரும்புலவர்கள் இன்றும் மக்கள் உள்ளத்தில் வாழ்கிறார்கள், என்றும் வாழ்வார்கள்."

"பலநாட்டு எழுத்தாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தியாவின் தலைநகரிற்கூடிய காட்சிகண்கொள்ளாக்காட்சியாகும். அவர்கள் அணிந்திருந்த பலவகையான உடைகளினால் எழுத்தாளர் மாநாடு கூடிய விஞ்ஞான பவன் எனும் மண்டபம் சோபையுடன் இலங்கியது. ஆசியாக் கண்டத்தின் சரித்திரத்திலே முதன்முறையாக இம்மகாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டிற்கூடிய பிரதிநிதிகள் யாவரும் அன்புடனும் பண்புடனும் ஒருவரோடொருவர் கலந்துரையாடினர்."

"பிறமொழிகளின் இலக்கியச் செல்வங்களை அறியவும் பிறநாட்டு மக்களின் வாழ்வியலை விளங்கிக் கொள்ளவும் ஒவ்வொருவரும் ஆர்வங் கொண்டனர். தங்கள் தங்கள் தாய்மொழிகளின் பெருமைகளை எடுத்துக் கூறுவதிலும் அவற்றை வளம்படுத்துதற்குச் செய்யவேண்டியவற்றை ஆராய்தலிலும் பிரதிநிதிகள் ஈடுபட்டிருந்தனர். பிரதிநிதிகளுடைய உரையாடலில் தாங்கள் எந்த நாட்டினர்? என்ற கேள்வியின்பின் தங்கள் மொழியாது? என்ற கேள்வியே எழுந்தது?".

"இது மொழிக்கு மக்கள் அளிக்கும் பெருமையை நன்கு காட்டுகிறது. ஒருவருடைய தாய் மொழிதான் அவருக்குப் பெருமையையுஞ் சிறப்பையுங் கொடுக்கிறதென்பதை உணர்த்துகிறது. மொழியழிந்தால் இனம் அழியும், மொழி உயர்ந்தால் இனம் உயரும் என்பதை யாவருக்கும் ஆசிய எழுத்தாளர் மாநாடு எடுத்துக் காட்டியுளது."

இதன்பின்னர் பண்டிதர் அவர்கள் ஆசியமாநாட்டு நிகழ்ச்சிகளை விரிவாக எடுத்துக்கூறினர். கூட்டத்துக்கு உணவு கமத்தொழில் அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு. சோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமைதாங்கினர்.

---

காஷ்மீர்ப் பேச்சுக்களில்

## ஏமாற்றங்கள்

———o———

### எதிர்பாராத முறையில் தொடர்ந்துண்டாகின்றன

ஐக்கியநாட்டுச் சபையிற் காஷ்மீர்பற்றி பாக்கிஸ்தான் சமர்ப்பித்த பிரேரணைக்கு இந்திய பிரதிநிதி ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன் பதிலளித்து முடிய முன்னரே அமெரிக்கா பிரித்தானியா முதலிய உலக வல்லரசுகள் ஒன்றுகூடிக் காஷ்மீர் நிலைமையில் மாற்றம் எதுவும் செயயப்படக்கூடாதென்னும் ஓர் பிரேரணையைப்பிரேரித்து நிறைவேற்றின. இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதைத் தடுப்பதே இப் பிரேரணையின் நோக்கமாயிருந்தது. உரு உருசியா இத்தொடர்பில் ஒன்றும் பேசவில்லை. இந்தியாவுக்கு இந்நிலைமை ஓர் ஏமாற்றத்தை உண்டாக்கியது. இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதுபற்றிய பேச்சுக்கே இடமில்லை; அது முன்னரே இணைந்த இந்தியாவின் ஓர் பகுதியாயிப் பொழுதிருக்கிறது என்பது இந்தியா எடுத்துக் காட்டும் நியாயம்.

இந்தியாவுக்கு இது ஏமாற்றமாயிருக்க, அப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது பற்றிப்பாக்கிஸ்தான் பெருமகிழ்ச்சி கொண்டு காஷ்மீரிலுள்ள இந்திய பாக்கிஸ்தானிய படைகளை வெளியேற்றி ஐக்கிய நாட்டுப் படைகளை நிறுத்த வேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டது. அது ஐ நா. சபையின் இரண்டாவது செயலாய் உடனே நடைபெறவேண்டுமென்றது. இக்கருத்தை ஆதரித்து நடுநிலைமைத் தூதர்ஒருவரை அனுப்ப வேண்டுமென்று அமெரிக்கா பிருத்தானியா முதலிய நான்கு வல்லரசுகள் ஓர் பிரேரணையைக் கொண்டு வந்தன. காஷ்மீருக்கெதிராய்ப் பாக்கிஸ்தான் படையெடுத்தது என்று ஐ. நா. சபையில் இந்தியா சமர்ப்பித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் இந்தியாவுக்குச் சாதகமாக அக்காலத்திற் பிரேரிக்கப்பட்ட பிரேரணைகள் குறித்த நான்கரசுப் பிரேரணையில் இடம் பெறவேண்டும் என்று ஓர் திருத்தப் பிரேரணையைக் கொலம்பியா கொண்டுவந்தது. பிரேரணையைக் கொண்டு வந்த நான்கு நாடுகளுக்கும் இது ஓர் ஏமாற்றமாயிருந்தது.

ஆயினும் அத் திருத்தப் பிரேரணையைத் தோற்கச் செய்தனர். உருசியா மற்றொரு திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்தது. அதையும் அப்படியே தோற்கச் செய்தனர். உடனே தனது தடைஉரிமையை உருசியா உபயோத்து நான்கரசுப் பிரேரணையை நசுக்கி விட்டது. இது பாக்கிஸ்தானுக்கு ஓர் ஏமாற்றமாகும்.

---

### திருக்கோணமலையில் 'திருகுதாளம்'

திருக்கோணமலையில் உள்ள பிருத்தானிய கடற்படைத்தளம் நீக்கப்பட்ட பின்பு, அதை ஓர் கைத்தொழிற் றுறைமுகமாக்குமாறு வியாபார மந்திரி ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயக திட்டமிடுகின்றாராம். அவருடைய திட்டத்தின் படி திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்குப் பல பொருள்களை உண்டாக்கும் கைத்தொழில் நிலையங்களை உண்டாக்குவாராம். அவ்வாறு கைத்தொழில் நிலையங்களை அமைப்பதற்குப் பிறநாட்டவரை வரவழைத்தல் முடியுமென்பது அவருடைய கருத்தாகும்.

தமிழ் மக்கள் மனங்களில் இச்செய்தி ஓர் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. திருக்கோணமலையிலுள்ள தமிழ்மக்களை வெளியேற்றி கைத்தொழில் நிலையங்களை உருவாக்கி, சிங்கள மக்களைத் தொழிலாளராக நியமித்துக் குடியேறச் செய்து திருக்கோணமலையைச் சிங்களப் பகுதியாக்குதற்கு ஸ்ரீ சேனநாயக கையாளும் ஓர் திருகுதாளமாகும் இது என்பதாய்ப் பலர் சிந்தனையில் இச்செய்தி பரபரப்பையுண்டுபண்ணுகின்றது.

---

## ஆயுர் வேதத்தின் பண்டைப் பெருமை

### எல்லா முறைகளும் ஒற்றுமையாக மக்களுக்குச் சேவைசெய்யவேண்டும்

ஆயுர்வேதமானது எங்களுக்குப் பண்டு தொட்டு வரும் பெரும் உரிமையாயுள்ளது. அதன் சாத்திரங்கள் வடமொழியிலுள்ளன. வடமொழிக் கல்வி குன்றிவந்தமையால் அதன் சிறப்புக்களும் ஒருவாறு குன்றத்தொடங்கின. ஆயினும் பெரும் சித்தி பெற்றுப் பெரும் புகழ் ஈட்டும் ஆயுர்வேத வைத்திய வல்லுனர் இன்றும் உள்ளனர். ஆயுர்வேதத்தின் சரித்திரத்தை ஆராய்ந்துகொண்டு போகும்போது அது தகுதி வாய்ந்த கல்வி அறிவில்லாதவர்களின் கையில் ஒரு காலத்தில கப்பட்டதைக்காண்கின்றோம். இன்றும் பெரும்பான்மையும் நாட்டுப் புறங்களிலேயே அது ஆதரிக்கப்படுகின்றது. விஞ்ஞான வளர்ச்சியுடன் பிரதி குண சிகிச்சை முறை பெரும் முன்னேற்றமடைந்துள்ளது. அபபடியிருந்தும் செலவு மிகுதியாலும் நாட்டு மக்களிற் பெரும்பாலோருக்கு அதை உதவச் செய்தலிற் பெரும் இடைஞ்ச லிருப்பதனாலும் நாட்டு மக்களுக்கு வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஆயுர்வேதம் முன் வரவேண்டியிருக்கின்றது. ஆகையினாலே ஆயுர்வேதமானது தேவையான தொன்றென்பது மாத்திரமல்ல, அது எங்கும் கையாளத் தகுந்ததுமாயிருக்கின்றது. இக்காரணத்தினாற் போலும் மத்திய அரசாங்கமும் ஏனைய இந்திய அரசாங்கங்களும் ஆயுர்வேதத்தையும் ஏனைய நாட்டு வைத்திய முறைகளையும் ஊக்குவித்துக்கொண்டு வருகின்றன.

ஏனைய வைத்திய முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஆயுர் வேதத்துக்கு உயர்வு அல்லது தாழ்வு கற்பிப்பது என் கருத்தாக மாட்டாது. இரு வைத்திய முறைகளுக்கிடையிற் சண்டையிருக்க முடியாது. பிரதிகுண சிகிச்சை முறை ஆயுர்வேதத்தைப் பார்த்து எரிச்சற்படவேண்டியதில்லை. ஏனைய வைத்திய முறைகளைப் பார்த்து அவ்வைபயனற்றவைஎன்று ஆயுர் வேதம் நினைக்க வேண்டியதுமில்லை. ஆயுர்வேதமும் ஏனைய வைத்திய முறைகளும் ஒன்றுக்கொன்று பகையின்றி உடனிருந்து மக்களுக்குச் சேவை செய்தலே சாலச் சிறந்ததாகும் என்று கேரள தேசாதிபதி கலாநிதி பி. இராமகிருஷ்ணராவ் திருவனந்தபுர ஆயுர்வேதக் கல்லூரியிற் சித்திபெற்று வெளியே போகும் வைத்திய மாணவருக்களிக்கப்பட்ட பிரியாவிடைக் கூட்டத்திலே பேசும்போது கூறினர்.

---

உ

## ஓர் விண்ணப்பம்

மறவன்புலோவிலுள்ள கோயிலாக்கண்டி சிவன் கோயில் அநேக வருடங்களாகக் கிலமடைந்து பூசை முதலிய நியமங்கள் இன்றியிருக்கின்றது. அதன் தர்ம கர்த்தாக்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாருக்குச் சாதனமூலம் அக்கோயிலின் பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டார்கள். இதன் புனருத்தாரணத்துக்கு ரூ. 8000/= வரை தேவை. ஆகவே சைவச் சீலர்கள் யாவரையும் இச்சிவ கைங்கரியத்துக்குத் தங்களாலியன்ற பணவுதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

த. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்

முகாந்திரம் இ. பொ. இராசையா,
தனாதிகாரி,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

ஆ. தனபாலசிங்கம்,
செயலாளர்.

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


## திருவள்ளுவர் திருநாள்

### அண்ணுமலையில்

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமையில் 16-2-57-ல் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. பல அறிஞர்கள் நாயனர் பற்றியும் திருக்குறள் பற்றியும் பல பேருரைகள் நிகழ்த்தினர்.

### மீசாலையில்

மீசாலையில் கரும்பி மாவடிக் கோவில் முன்றிலில் கச்சாய்க் கிராமச்சங்கத் தலைவர் திரு. எஸ். கே. செல்லையா அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. வித்துவான் பொ. கந்தையனர், திரு. இ. த. சுப்பிரமணியம் முதலிய பல அறிஞர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர்கள்.

### பர்மா முதல் மந்திரி

பர்மாவின் முதல்மந்திரியாக ஸ்ரீ யு. நூ மீண்டும் பதவி ஏற்றுள்ளாராம்.


## அடைவுநகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், சீதாரி சப்பல்தெரு, 9-ம் நம்பர் வீட்டில் அடைவு பிடிப்பவர்களாகிய யோசேப் அன் கோ. மனேஜர், எஸ். பி. யோசேப் அவர்களிடம் 1954ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி தொடக்கம் 1955ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி வரையில் வைக்கப்பட்டுத் தவணை தப்பிய அடைவு நகைகள் 1957-ம் ஆண்டு பங்குனி மாதம் 22ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இடாப்பு மேற்படி இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Konamalai Ayadurai
கோணமலை ஐயாத்துரை
வெந்திஸ் மேஸ்தர்

யாழ்ப்பாணம், 28-2-57.
M 476 1, 8-3-57. (ரூ 100)


## பதுளை சைவ பரிபாலன சங்க வருடாந்தக் கூட்டம்

பதுளை சைவபரிபாலன சங்கத்தின் 31-வது வருடாந்த மகாசபைக் கூட்டம், சென்ற சனிக்கிழமை (23-2-57) மாலை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர், ஸ்ரீமான் கே. எஸ். இரத்தினசாமி தலைமைவகித்தார்.

கூட்டம் ஆரம்பமாகு முன் அரசாங்க மேற்சபை அங்கத்தவர் ஸ்ரீ பெரிசுந்தரம் அவர்களின் மறைவுக்காக அநுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

சங்க நடவடிக்கைகளில் மிக முக்கியமானது பதுளை சரஸ்வதி வித்தியாசாலையை யாழ்ப்பாணம் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினிடமிருந்து திரும்பப் பெறுவது சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமாகும். இத்தீர்மானம் நடைமுறையில் வந்தால் சரஸ்வதி வித்தியாசாலையின் வளர்ச்சி மேலோங்கு மென்பதைச் சபையினர் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கின்றனர்.

புதுவருட உத்தியோகஸ்தர் முதலியோர் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர். போஷகர், ஸ்ரீ. கே. வி. நடராசா. தலைவர், ஸ்ரீ. கே. எஸ். இரத்தினசாமி. உபதலைவர்கள், ஸ்ரீமான்கள், T. நாகரத்தினம், என். எஸ். கந்தையா, ஏ. தட்சணமூர்த்தி, R. சபாரத்தினம்; செயலாளர் திரு. எஸ். ஆறுமுகராசா; உப செயலாளர்கள் திருவாளர்கள் T. சிவபாதசுந்தரம், P. சபாரத்தினம். தனாதிகாரி திரு. எஸ். கே. சின்னத்தம்பி. உபதனாதிகாரி திரு. எஸ். பரமலிங்கம்.


# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராமகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 3—3—57 —— 9—3—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

ஒரு தளப்பமானவாரம் உமது மனம் அமைதியாயிருக்கமாட்டாது, சுகவீனங்களுக்கு மிடமுண்டு. புதுமுயற்சிகள் விரும்பிய பலனைத் தரமாட்டா. மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

குடும்பச் சூழலில் சில திருத்தங்களுக்கிடமுண்டு. நண்பர்களுடனும் இனத்தவர்களுடனும் பிழை எண்ணங்கள் நீக்கப்படும். பண நெருக்கடிகளும் குறையும். பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

எதிர்ப்பு நீங்குவதைக் காண்பீர். பணநெருக்கடியும் குறையும். புகழும் சமூக சித்தியும் நிச்சயம். ஆனல் மனச்சமாதானமிருக்கமாட்டாது. அத்துடன் அளவு கடந்த வேலை செய்யவும் வேண்டும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

நீர் இந்த வாரம் மிகப் பல சிக்கல்களை முன்னிடவேண்டி வரும். செலவதிகரிக்கும். குடும்பநிலைமைகள் பெருங் குழப்பமாயிருக்கும், இடைஞ்சல்களிலிருந்து நீங்க உதவி செய்தற்கு உம்முடைய நண்பரை நீர் நம்பியிருக்கலாம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

தனலாபம் நிச்சயம். நீர் புது நட்புத் தொடர்புகளுண்டாககுவீர். ஆனல் குடும்பச் சூழலில் சில பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. ஆனல் வசை மொழி பரப்புவோருககு இடங்கொடுகக வேண்டாம் ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

எதிரிகள் அழிவுக்கிடமுண்டு. ஆனல் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. உத்தியோகத் துறையில் ஒருநல்லவாரம். வேலை வழக்கத்திலும் மிகக கூடுதலாயிருககும். வார இறுதியில் புகழும் சமூக சித்தியும் நிச்சயம். செவ்வாய் புதனும் வியாழன் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**துலாம்** சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

நீர் இந்த வாரம் சண்டைதொடுக்கவிரைந்துசெல்வீர். இடைஞ்சல்களிலிருந்து நீங்குதல் உமக்கு அவ்வளவு இலகுவாயிருக்கமாட்டாது. இரகசியப் பகைவரைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். கந்தோரிலும் தொநதரவுகளுக்கிடமுண்டு. வியாழன் பிற்பகல் வெள்ளி சனி மிகப்பழுதான நாட்கள்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஒரு சித்தி தரும்வாரம். உத்தியோகநிலைமைத் திருத்தங்களும் புகழும் நிச்சயம். ஆனல் உம்முடைய தனிப்பட்ட அகவாழ்க்கையில் சில கண்டங்களையும் இழிமொழிகளையும் நீர் முன்னிட வேண்டி வரும். வாரஇறுதி சில நல்ல புதினங்களைத் தரும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

பணத்துறையில் மிக நல்லவாரம் சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்: நடைமுறைகளில் திருப்பவும் சில மாற்றங்களுக்கிடமுண்டு. தேக சுகம் சிறிது காலத்துக்கு நல்லாயிருக்க மாட்டாது.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

தனலாபம் நிச்சயம். உம்முடைய உத்தியோக வாழ்க்கை தொடர்ந்துசெழிப்படையும் சில குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. ஆனல் வார இறுதிக்கு முன் எந்தப் பிழை எண்ணத்தையும் நீர் நீக்கக்கூடியதாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இந்த வாரம் தொடர்ந்து தளப்பமாயிருக்கும். குழப்பம் செய்வோரைப்பற்றி நீர் மிகக் கவனமாயிருக்க வேண்டும் உம்முடைய நண்பராகவும் உம்மைப் போற்றுபவராகவும் நடித்தவர்கள் உம்முடைய பகைவராய் மாறக்கூடும். வாரஇறுதி தொந்தரவில்லாததாயிருக்கும், தனலாபமும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

ஒரு நல்ல வாரம் நீர் இடைஞ்சல்களிலிருந்து நீங்கக்கூடியதாருக்கும் மனச்சமாதானமும் உத்தியோக சிததியும் நிச்சயம். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றவும்.


## சுயமொழிக் கொள்கையால் கல்விக் குழப்பம்

= 0 =

யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. கே. ஏ. செல்லையா அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் இன்று இந்நாட்டில் அரசாங்கம் கையாண்டுவரும் சுய மொழிக் கொள்கையால் உண்டானது குழப்பமே என்பதைக் குறிப்பிட்டிருந்தார். இது நாட்டில் பொதுவாக இன்று நிலவும் கருத்தாகும். இவ்விழாவில் ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலைப் பேராசிரியர் ஸ்ரீ. ஜே. ஆர். ஹிக்ஸ் சமுகமளித்தார்.

## யந்திர வண்டிகளில் தமிழ் எழுத்துப்பற்றிய சட்டம்

தமிழ் எழுத்துக்கள் பொறித்து யந்திர உந்துவண்டிகளை ஓடுவோர்மீது வழக்குத் தொடரப்படுமெனத் தமது கருத்தை முதல் மந்திரி வெளியிட்டார். பல வழக்குகள் உண்டாகலாமென்று பலர் கருதினர். இக்கருத்தை வலியுறுத்த அமைவதாய்ப் பாடிகாவலர் பகுதியினர் யந்திர உந்துவண்டிகளை மறிந்து விபரங்கள் பெற்றனர். ஆயினும் தமிழ் எழுத்துக்களைப் பொறித்தோடுவோர் மீது வழக்குத் தொடர்தற்குச் சட்டம் இடங்கொடுக்கவில்லை என்று மந்திரிசபையாருக்குச் சட்டத்துறையினர் கூறியிருக்கின்றனரென்று அறியவருகின்றது. ஆனல் நிலைமை எதுவாயினும், ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முதல் மந்திரி தீர்மானித்துள்ளாராம்.

## புத்த சர்வகலாசாலை

—0—

புத்த சர்வ கலாசாலை ஒன்று கண்டியில் அவசியம் அமைக்கப்படுதல் வேண்டுமென்று அதுபற்றி ஆராயும்பொருட்டுக் கல்வி மந்திரியைக் கேட்டிருக்கின்றாராம் மந்திரி சி. ஏ. எஸ். மரைக்காயர். காசுச் சீட்டுகளிற் சிங்களத்துக்கு மேன்மை கொடுக்க முற்பட்டவரும் இவரே என்பது குறிப்பிடத் தக்கது.

## பிரித்தானியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

இலங்கையிலுள்ள பிரித்தானிய தளங்கள் இலங்கை அரசாங்கத்திடம் அணிமையில் ஒப்படைக்கப்படும். அவ்வாறு தளங்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னரும் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்ந்து நிலைக்க வேண்டுமென்று முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக கருதுகின்றாராம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. யாழ்ப்பாணம் ஆசுபத்திரி ரோட்டு வ. யோ. பெனடிற்ம்
2. ஷெ பெண் சிசிலியாவும்
வழக்காளிகள்

இல. MB 429

எதிராக

1. கரம்பன் இப்போ கொற்ற கேணு சுப்பர் சிவரத்தினம்
2. கொழும்பு செட்டித்தெரு சி. இராமசாமிப்பிள்ளை
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 429 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ௵ பங்குனி ௴ 29 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று கரம்பன் இறை பாலைக்காடு நெற்பரப்பு 4 குளி 4ம் விடும் தென்னைகளும் பனைகளும் வேம்புகளும் எல்லை கிழக்கு கந்தையா பெண் தில்லை முத்துவும் பங்காளரும் வடக்கு மங்களவாரமடத்துக்குரிய வாதனம், மேற்கு கந்தையா பெண் தங்கம்மாவினுருமைக்காறர். தெற்கு ஆறுமுகம் கந்தையா. இதடக்கலும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்,
16-2-57.
M 473 1-3-57 (து, 50)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 கொளும்புத்துறை சுப்பிரமணியம் இரத்தினசிங்கமும்
2 பெண் முத்துலட்சுமியும்
—வழக்காளிகள்

இல. MB 432

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு பெரியகடை
கந்தையா அப்புத்துரை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 432 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ௵ சித்திரை ௴ 6 உ சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 12666 - 60ம் இதில் ரூபா 10000/-க்கு 23 8-55 திகதி தொடக்கம் 30-11-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 10 வீத வட்டியும், அதன் மேல் முழுத் தொகைக்கும் 30-11-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ஐந்து விதமான வட்டியும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்த்றிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை பிள்ளையான் வளவு நிலப்பரப்பு ஒன்று (1) குளி 13 19/20ம் கல்வீடும் கிணறும் பயிர் வகைகளும், எல்லை கிழக்கு சின்னட்டிப்பிள்ளை பொன்னம்பலம், வடக்கு ஒழுங்கையும் கார்த்திகேசுஐயர் பெண் அன்னபூரணி அம்மாவின் உருமைக்காரரின் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, தெற்கு வெங்கடாசலம் பெண் பறுபதி அம்மாவினுதனம் இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
8-2-57.
M 472 1-3-57 (து 50)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அராலி கிழக்கு
சிவப்பிரகாசம் தர்மா
வழக்காளி

இல. M. B. 851

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு ராவ்ஸ் ரோட்

1 அப்துள் காடர் மொகமெட்
2 பெண் மைமூன்
3 அப்துள் லாரிவ் அலிம் மொகமெட் மீருன் மொகிடீன்
4 பெண் மொகமெட்நாச்சியா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டின் M. B. 851-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ௵ சித்திரை ௴ 2 ௴ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5670-ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் ரூபா 5000 க்கு 10 வீத வட்டி 28-2-56 தொடக்கம் 21-9-56 வரைக்கும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 21 9.56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 175.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "ஆனைவிழுந்தான்" பர. நில, இலா. 3 குழி 13 1/2 வீடும் கிணறும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் இது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் 3072-ம் இலக்க வழக்கில் உலாந்தா J. D. வீரசிங்கத்தால் விஸ்தாரிக்கப்பட்ட 2296-ம் இலக்கப் படத்தின்படி எல்லை கிழக்கு மண்தெரு வடக்கு அப்துல் லாரிவ் ஆலிமன்காணி மேற்கு மொகமெட் மீருப்பிள்ளை கஜியார் பெண் மொகமெட் சுல்தான் பாத்தும்மாவின் உருமைக்காரரின் காணி, தெற்கு மொகமெட் பாததுமா நாச்சியாவுக்கும் மொகமெட் காசிமுக்கும் பங்காளருக்கும் முடலிம்லெப்பை கைம் பெண் மொகமெட் உசன் நாச்சியாவுக்கும் மொகிடீன் தம்பி பெண் மீருமொகிடீன் நாச்சியாவுக்கும் உரிய காணிகள் இதடக்கலும் வீட்டு வரி இலக்கம் 57/4,

சே. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, செப்பல் வீதி
யாழ்ப்பாணம்.
23-2-57
M 477 1-3-57 (து. 200)

## விற்பனவு விளம்பரம்

டிஸ்திறிக்கோடு பருத்தித்துறை
இல: 42
புலோலி கிழக்கு கணபதிப்பிள்ளை கந்தசுவாமி
பிட்டிசகாரன்.

எதிராக

புலோலி கிழக்கு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
எதிரி.

இதன் பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1957ம் ஆண்டு பங்குனி மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணியினிடமாக விருந்து என்னுற் பிரசிதத ஏலத்தில். விற்கப்படும்.

ஆதனம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ் திரிக் வண்ணார்பண்ணைப் பகுதி வண்ணார்பண்ணை கிழக்கு அணிஞ்சிலடி நிலப் பரப்பு 9¾ இதில் தெற்குப் புறமாக பாட்டிசன்படியும் ஆட்சிப்படியும் ஏறக்குறைய நிலப் பரப்பு 1. இதற்குள்ளிருக்கும் கட்டிடமும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கந்தவனம் பெண் தையல்நாயகிக்குரியவாதனம். மேற்கு ரோட்டு. தெற்கு என். எம் அப்துல் காஜியாயின் ஆதனம். இது முழுவதும்.

கொம்மிஷனர்,
சு. நடராசசிங்கம்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை,
25-2-57.
M. 475 1-3-57 (து 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்பாணம் ஊரெழு
சின்னததம்பி சிவகுரு
வழக்காளி

M. B. 957

எதிராக

யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை கிழக்கு கந்தர்மடம்

1 சுந்தரம்பிள்ளை செல்லத்துரையும்
2 பெண் கண்மணியும்
3 முருகேசு இராமனுதனும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 957-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ௵ பங்குனி ௴ 30 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபா 9382 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் ரூபா 8756 க்கு 6 வீதவட்டி 9-5-56 தொடக்கம் 5-9-56 வரைக்கும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 5 9-56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "முதியன் ஓடையும் சுண்டலைப் பிட்டியும் மாவிலக்ககடையும்' பர நில இலா. 6 கிணறும் கல்விடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு மூத்ததம்பி தம்பிராசாவுடைய ஆதனம் வடக்கு சுப்பிரமணியம் மகள் புனிதவதியின் ஆதனம் மேற்கு சின்னத்தம்பி கந்தையாவின் உரித்தாளரின் ஆதனம், தெற்கு ரோட்டு இதடங்கலும் பதிவு இலக்கம் D 215/9.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்

24, செப்பல் வீதி,
யாழ்ப்பாணம்
20-2-57,
M. 478 1-3 (து 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—::—

காரைதிவு வடக்கு
ஆறுமுகம் அருணாசலம்
வழக்காளி

இல, MB 776

எதிராக

1 காரைதிவு மேற்கு சண்முகம் கார்த்திகேசுவும் பெண்
2 ஷெ செல்லம்மா
3 ஷெ சண்முகம் கைம்பெண் தெய்வானை
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 776ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்பட்டும் துண்டுக் காணி 1957 ௵ சித்திரை ௴ 5 உ வெள்ளிகிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.


தீர்வைத் தொகை:- முதல் வட்டி 1143-00ம் இதில் ரூபா 1000/– க்கு 1-2-56 திகதி தொடக்கம் 27-7-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 7 வீத வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 27-7-56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 203-97 இதில் 10-1-57ல் ரூபா 500-00 கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதிவுக் கோயிற்பற்று தங்கோடை இறை சேதான்காடு நிலப்பரப்பு 2½யும் பனைகள் வடலிகள் வான் பயிர்களும் வீடுகளும் எல்லைகிழக்கு செல்லத்தம்பி பெண் நாகம்மாவும் ஆறுமுகம் அம்பலவாணரும் வடக்கு ஒழுங்கையும் கனகசபை கைம்பெண் பாலனம் மேற்கு சாமுவேல் குணரத்தினம் தெற்கு நாகன் தில்லையன், இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா,
கொம்மிஷனர்.

காரைநகர்
23-2-57.
M, 474 1-3 (து. 50)




வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 1-3-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## விளம்பரம்

சாவகச்சேரி றிக்குவெஸ்ட் கோட்டில்

இல. 862

நுணுவில் றிக்கிறியேஷன் கிளப் தலைவர் நுணுவில் கனகசபை விசுவலிங்கம் தனக்காகவும் குறித்த கிளப்பின் மற்ற அங்கத்தவர்களுக்காகவும் வழக்காளி

எதிராக

நுணுவில் கிழக்கு மாணிக்கம் மயில்வாகனம் — எதிராளி

நுணுவில் றிக்கிறியேஷன் கிளப் தலைவர் நுணுவில் கனகசபை விசுவலிங்கம் மேற்குறித்த இலக்க வழக்கு 1955-ம் ஆண்டு குறித்த கிளப்பின் உபகாரியதரிசியாகவிருந்த நுணுவில் மாணிக்கம் மயில்வாகனத்துக்கெதிராக அவர் அபகரித்ததும் இதன்கீழ் அட்டவணையிலிருப்பதுமான ரூபா 2075 பெறுமதியான தளபாடப் பொருட்களை அல்லது அவற்றின் பெறுமதி ரூபா 207 ஐ அறவிடுவதற்காகத் தொடரப்பட்டிருக்கிறது: இவ்வழக்கைத் தொடருவதற்கு வேண்டிய உரித்தும் தத்துவமுங்கொண்டதும் 1955-ம் ஆண்டு மார்கழி ௴ 11-ந் திகதியைக் கொண்டதுமான குறித்த கிளப்பின் நிருவாகசபையின் தீர்மானத்தின்படி குறித்த வழக்காளி இவ்வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்.

இவ்வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதைப்பற்றி குறித்த கிளப்பின் அங்கத்தவர்கள் யாபேருக்கும் இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நுணுவில் றிக்கிறியேஷன் கிளப்புக்காக இவ்வழக்கின் இறுதிவரை குறித்த கனகசபை விசுவலிங்கம் வழக்காளியாகத் தொடர்ந்து நடத்துவார்.

பொருட்களின் இடாப்பு

1 ஒருமேசை
2 மூன்று வாங்குகள்
3 ஒரு கதிரை
4 ஒரு அலுமாரி
5 ஒரு கதவு நிலை
6 ஒரு யேல் ஆமைப்பூட்டு

எல்லாமாகப் பெறுமதி ரூபா 270

கோட்டுக் கட்டளைப்படி
Sgd C. Satlasivam
பிரதம லிகிதர்
(ஒப்பம்) சி. சிவராசா
வழக்காளியின் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது.
18 February 1957.
O 331 27-2, 1-3

## ஆதீனத்திலிருந்து அகன்றாராம் குன்றக்குடி அடிகள்

குன்றக்குடி அடிகளார் திருப்பெருந்திரு அருணாசல தேசிக பரமாசாரியர் அவர்கள் ஆதீனப் பொறுப்பு தேவஸ்தானப் பொறுப்பு அருள்நெறிக் கூட்டம் ஆகிய எல்லாவற்றிலுமிருந்து நீங்கி அவற்றைத் திருநெல்வேலி ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரானிடம் ஒப்படைத்துள்ளாராம்,

—0—

## தற்காலிக உள்நாட்டு மந்திரி

பாராளுமன்றக் காரியதரிசி ஸ்ரீ ஐ. எம் ஆர். ஏ. இரியகொலை தற்காலிக உள்நாட்டு மந்திரிப்பதவி ஏற்கமறுப்பாரென்று கூறப்படுகின்றது. உள்நாட்டுமந்திரி வெளிநாட்டுக்கு இந்தமாசம் போகும்போது ஸ்ரீ இரியகொல தற்காலிக மந்திரியாய்க் கடமையாற்ற மறுப்பாரானுல் ஸ்ரீ மகாநம சமாவீர தற்காலிக உள்நாட்டுமந்திரியாய் அமர்த்தப்படக்கூடுமாம்.